சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 10 (lw–17) | நாள் | 02.04.2025 |
| பெயர் | தர்மா | தொழில் | |
| தந்தை பெயர் | மாயக்கிருஷ்ணன் | வயது | |
| கிராமம் | கலைஞர் காலனி | தாலுக்கா மயிலாடுதுறை | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. 6, 8, 9 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன் மயிலாடுதுறை நகராட்சியில் டெங்கு ஒழிப்பு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அஜித்குமார் கொலை செய்யப்பட்டு இறந்தார். அவர் சந்திரமோகன் மற்றும் அவர் கூட்டாளிகளால் கொலை செய்யப்பட்டார். 2021 ம் ஆண்டு பேர்ல்ஸ் தியேட்டர் எதிர்புறம் உள்ள தள்ளுவண்டி இட்லிக்கடையில் கண்ணனும் கதிரவனும் சாப்பிட்டு கொண்டிருந்தபோது அவர்களுக்குள் தகராறு ஆகிவிட்டது. அப்போது கதிரவனை வெட்டிவிட்டார்கள். அதனால் கண்ணன் குரூப்பை கைது செய்து உள்ளே வைத்துவிட்டார்கள். 2022ம் வருடம் பேர்ல்ஸ் தியேட்டர் எதிர்புறம் கண்ணன் கொலை செய்யப்பட்டார். அதனால் கலைஞர் காலனியை சேர்ந்த 22 பேரை போலிசார் கைது செய்தார்கள். அதன்பிறகு கண்ணனின் தம்பி சந்திரமோகனை வெடிகுண்டு மற்றும் ஆயுதங்களுடன் போலிசார் கைது செய்தார்கள். 2024ம் ஆண்டு அஜித்தும் சரவணனும் மாப்படுகைக்கு நாயை மேட்டிங் விடுவதற்காக இருசக்கர வாகனத்தில் போனார்கள். ஒரு ஐந்து பேர் இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்து அஜித்குமாரை வெட்டினார்கள். அதை தடுக்கபோன சரவணனையும் வெட்டினார்கள். அஜித்தை வெட்டிக்கொன்றுவிட்டார்கள். உயிருக்கு பயந்து சரவணன் தப்பித்து ஓடிவிட்டார். மேற்படி சம்பவம் பெருமாள் கோவில் தெற்கு

வீதியில் நடந்தது. பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சரவணன் சிகிச்சைக்காக வந்தார். அன்று இரவு நாங்கள் ஒரு ஆறு, ஏழு பேர் அவரை போய் பார்த்தோம். அவரை விசாரித்தபோது சந்திரமோகனும் அவரது கூட்டாளிகளும் தன்னை வெட்டிவிட்டதாக சொன்னார். மறுநாள் காலையில் அஜித்குமார் உடல் அருகே மயிலாடுதுறை DSP மயிலாடுதுறை GH ல் வைத்து என்ன நடந்தது ஏது நடந்தது என்று எங்களை விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன அஜித்குமார் எனக்கு தம்பி உறவு முறை என்றால் சரி. அவர் எனக்கு சின்ன வயது முதல் பழக்கம். அதனால் நான் நடக்காத, தெரியாத சங்கதிகளை சரவணன் மூலம் கேள்விப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M. Dm...

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சரவணன் என்னிடம் சொல்லாத செவி வழி செய்தியை சாட்சியம் அளிப்பது ஆட்சேபணைக்குரியது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை மனப்பாடம் செய்து போலிசார் சொல்லிக்கொடுத்து ஒப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணன் கொலை செய்யப்பட்டது, ஆயுதங்களுடன் சந்திரமோகன் கைது செய்யப்பட்டது, ஆகியவை நான் கேள்விப்பட்டவை என்றால் சரி. நான் முதல் விசாரணையில் தெரிந்து கொண்டதாக சொன்ன விவரங்கள் உண்மையல்ல என்றாலும், அவ்விதம் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அஜித்குமாரை ஐந்து பேர் கொண்ட கும்பல் மறைத்ததாக சரவணன் என்னிடம் சொன்னார், சரவணன் என்னிடம் பொய்யாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. சரவணன் என்னிடம் ஐந்து பேர் கொண்ட கும்பல் மறைத்ததாக சொன்ன சங்கதி தவறான சங்கதி என்றாலும், அதனடிப்படையில் நான் அளித்த சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. இறந்து போன அஜித்குமார் எனக்கு தம்பி உறவு என்பதாலும் என் தெருக்காரர் என்பதாலும், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 2/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

[signature] 2/4/25

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 (lw– 16) | நாள் | 02.04.2025 |
| பெயர் | அலக்ஸாண்டர் | தொழில் | |
| தந்தை பெயர் | ராமமூர்த்தி | வயது | |
| கிராமம் | கலைஞர் காலனி | தாலுக்கா மயிலாடுதுறை | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். நான் மயிலாடுதுறை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போனவர் அஜித்குமார் அவர் எனக்கு மச்சான் உறவு முறை. ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் சந்திரமோகனை மட்டும் எப்போதாவது கடைத்தெருவிற்கு வரும்போது பார்த்திருக்கிறேன். 2021ம் வருடம் பேர்ல்ஸ் தியேட்டர் எதிர்புறம் உள்ள ஓட்டலில் கண்ணன் மற்றும் கதிரவனும் சாப்பிடும்போது வாக்குவாதம் ஏற்பட்டு கண்ணனும் அவரது கூட்டாளிகளும் சேர்ந்து கதிரவனை அங்கேயே வெட்டிவிட்டார்கள். அது சம்பந்தமாக போலிசார் கண்ணனையும் அவரது கூட்டாளிகளையும் கைது செய்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். 2022ம் வருடம் கண்ணனை கலைஞர் காலனியை சேர்ந்த 22 பேர் கொலை செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதற்கு பழிக்கு பழிவாங்க வெடிகுண்டு மற்றும் ஆயுதங்கள் சந்திரமோகனை வைத்திருப்பதாக போலிசாருக்கு தகவல்

R. A[illegible]

கிடைத்து சந்திரமோகன் மற்றும் அவரது கூட்டாளிகளை போலிசார் கைது செய்து சிறைக்கு அனுப்பிவிட்டாரகள் 20.03.2024 அன்று கொலை செய்யப்பட்ட அஜித்தும் அசா 1 சரவணனும் நாயை மேட்டிங் செய்ய இருசக்கரவாகனத்தில் அழைத்து சென்று விட்டு திரும்பி இரவு 9.00 மணியளவில் வரும்போது திருவழுந்தூர், பெருமாள் கோவில் தெற்கு வீதியில் இரண்டு டூவிலரில் ஐந்து நபர்கள் வந்து அஜித்குமார் மற்றும் சரவணனை வழி மறைத்து அஜித்தை அங்கேயே தலையில் வெட்டி கொடூரமாக கொலை செய்து விட்டார்கள். தடுக்க சென்ற சரவணனை வெட்டிவிட்டார்கள். சரவணன் மயிலாடுதுறை GH ல் சிகிச்சைக்காக சேர்ந்தார். அப்படி அஜித்தை கொலை செய்தவர்கள் சந்திரமோகன், சதீஷ், சத்யா (மற்றவர்கள் பெயர் நினைவில்லை) என்று கேள்விப்பட்டேன். சரவணனை GH ல் போய் பார்த்தேன். சரவணனை தஞ்சாவூருக்கு refer செய்தார். மறுநாள் காலையில் மயிலாடுதுறை DSP அஜித்குமார் உடல் இருந்த GH க்கு வந்து, விசாரித்தார்கள் நான் சரவணன் சொன்னதை சொன்னேன். சந்திரமோகன், அஜித், சதீஷ், சத்யா மற்றும் ஸ்ரீராம் ஆகியோர் அஜித்குமார் கொலைக்கு காரணம் என்று சொன்னேன். அவ்வளவுதான். இந்த வழக்கு சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த

R. Ar[illegible]

வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன அஜித்குமார் எனக்கு மச்சான் என்றால் மச்சான் உறவு முறை. எனக்கு இந்த வழக்கின் விவரங்கள் தெரியாது என்றாலும் இறந்து போன அஜித்குமார் எனக்கு மச்சான் உறவு என்பதால் எதிரிகளின் பெயரை முதல் முறையாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**9 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சரவணன் சொல்லாத சங்கதிகளை அவர் இங்கு சொல்லாதபோது செவிவழி செய்தியாக நான் இங்கு சொல்வது ஆட்சேபணைக்கு உரியது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் கேள்விப்பட்டது தான். நான் கேள்விப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள கேள்விப்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் ஐந்துபேர் கொண்ட கும்பல் அஜித்தை மறைத்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும் அப்போது அவர்கள் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. அப்போது அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. சரவணன் கண்ணன் தம்பி தான் என்று சொன்னார் மற்றவர்கள் பெயரை நியூஸ் பேப்பரை பார்த்து தெரிந்து கொண்டேன்.

R. A[illegible]

சரவணன் கண்ணன் தம்பிதான் என்று சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் சரியல்ல. சந்திரமோகன், அஜித், சதீஷ், சத்யா ஆகியோர் பெயரை முதன்முறையாக நீதிமன்றத்தில் வழக்கை முன்னேற்றுவதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. DSP விசாரித்தபோது சொன்னேன். இந்த விவரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன ஐந்துபேரும் அந்த இடத்தில் இல்லை என்றாலும் நான் அவர்கள் அங்கிருந்ததாக கேள்விப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக அவர்கள் பெயரை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R. Anand

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

2/4/25

# சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
### சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 8 (lw– 15) | நாள் | 02.04.2025 |
| பெயர் | பாபு | தொழில் | |
| தந்தை பெயர் | நாகப்பன் | வயது | |
| கிராமம் | கலைஞர் காலனி | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். நான் மயிலாடுதுறை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். 2021 ம் வருடம் பேர்லஸ் தியேட்டர் எதிர்புறம் உள்ள தள்ளுவண்டி கடையில் கலைஞர் காலனியை சேர்ந்த கதிரவனுக்கும் கொத்த தெருவை சேர்ந்த கண்ணன் என்பவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்கள் இருவருக்கும் சண்டையாகி கதிரவனை கண்ணன் என்பவரும் அவருடைய கூட்டாளிகளும் வெட்டிவிட்டார்கள். கதிரவனை மயிலாடுதுறை அரசு மருத்துவனையில் அட்மிட் செய்துவிட்டு கண்ணனையும் அவரது கூட்டாளிகளையும் போலிசார் கைது செய்து விட்டார்கள். 2022ம் வருடம் அவர்கள் ஜெயிலில் இருந்து வெளியே வந்து விட்டார்கள். அதன்பிறகு 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17ம் நாள் கண்ணன் என்பவர் பேர்ல்ஸ் தியேட்டர் மெயின்ரோட்டில் கண்ணன் கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக கலைஞர்காலனியை சேர்ந்த 22 பேர் மீது வழக்குபதிவு செய்யப்பட்டது. இதனால் கண்ணனின் தம்பி சந்திரமோகன் என்பவர் பழிக்கு பழி தீர்க்கவேண்டும் என்று சொல்லி வெடிகுண்டு, தயார் செய்தார். அரிவாள்

போன்ற ஆயுதங்களை தயார் செய்தார் அது போலிசாருக்கு தெரிந்து அவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்பினார்கள். 20.03.2024 அன்று இரவு அஜீத், சரவணன் ஆகியோர் நாய்க்கு மேட்டிங்க் செய்வதற்காக மாப்படுகைக்கு இரண்டு சக்கரவாகனத்தில் அழைத்து சென்று விட்டு திரும்பும்போது திருவழுந்தூர், பெருமாள் கோவில் தெற்கு வீதி அருகே ஐந்து ஆறு இருசக்கர வாகனத்தில் வந்து வழி மறைத்து அஜித்தை சரமாரியாக வெட்டி கொன்று விட்டார்கள். அதை தடுக்க வந்த சரவணனை வெட்டியபோது அவர் உயிர் தப்பித்து ஓடிவிட்டார். அதன்பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதன்பிறகு தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். 21.03.2024 அன்று மயிலாடுதுறை DSP எங்களை இது சம்பந்தமாக விசாரித்தபோது நாங்கள் என்ன காரணத்தினால் கொலை நடந்தது என்ற விவரத்தை சொன்னோம். சரவணனை நாங்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போய் பார்த்தோம் அப்போது கண்ணன் தம்பி சந்திரமோகன் மற்றும் அவரது கூட்டாளிகள் தான் வெட்டியதாக சொன்னார். தன்னை வெட்டியபோது தான் ஒரு வீட்டிற்குள் புகுந்து விட்டதாகவும் அதனால் தான் தன்னால் தப்பிக்க முடிந்தது என்று அவர் சொன்னார். DSP என்னை இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தபோது மேற்படி சங்கதிகளை சொன்னேன். இறந்து போனது என் தெருவை சேர்ந்த அஜித்குமார் என்பவர். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கொலையுண்டு இறந்துபோன அஜித்குமார் உடலை பார்த்தேன்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரி. சரவணன் என்னிடம் சொன்னதாக சொல்லும் சங்கதிகளை சரவணன் சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக அந்த சங்கதிகளை முன்னிலை படுத்துகிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன அஜித்குமார் எனது பக்கத்து வீட்டுகாரர் அவர் எனக்கு சுமார் 30 வருடங்களாக பழக்கம். அதனால் அவருக்கு ஆதரவாக தெரியாத விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**9 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சரவணன் என்னிடம் சொன்னதாக சொல்லும் சங்கதிகளை அவர் சொல்லவில்லை என்றாலும் அந்த சங்கதிகளை ஆட்சேபணைக்கு உட்பட்டவை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் முதன்முறையாக வழக்கிற்காக இப்போது தான் அந்த சங்கதிகளை கூறுகிறேன் என்றால் சரியல்ல. கண்ணன் கதிரவனுக்கிடையே ஏற்பட்ட முன்விரோதம் கண்ணன் கொலை செய்யப்பட்ட விவரம், சந்திரமோகனை ஆயுதங்களை தயார் செய்ததற்காக கைது செய்ததாக சொன்னவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. என்னை தெருக்காரர் என்ற முறையில் போலிசார் மயிலாடுதுறை GH ல் ஒரு சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றால் சரி. சரவணன் எனக்கு நெருக்கமான உறவினர் என்றால் சரியல்ல தெருக்காரர். தெருக்காரர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் சரவணனும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. அதனால் ஆர்வத்தோடு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

2/4/25